செ.வெ.எண்: 09 நாள்: 03.02.2017

**தமிழகஅரசின் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு விரைவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிய கால்நடை மருந்தகங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது.

தமிழகஅரசு கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்களின் நலனை கருத்தில் கொண்டு அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், ராப்பூசல் மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மீனவேலி ஆகிய கிராமங்களில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த புதிய கால்நடை மருந்தகத்தில் கால்நடைகளுக்கு தேவையான சிகிச்சை அளிக்கும் வகையில் ஒரு கால்நடை மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர் மற்றும் ஒரு உதவியாளர் பணி நியமனம் செய்யப்படுவார்கள். இம்மருந்தகத்தில் ரூ.1 இலட்சம் மதிப்பில் கால்நடைகளுக்கு தேவையான மருந்துகள் இருப்பில் இருப்பதுடன், கால்நடைகளுக்கு சினை ஊசி போடுதல், தடுப்பூசி, அறுவை சிகிச்சை போன்ற பல்வேறு உயர்தரமான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படும். இம்மருந்தகம் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும், விடுமுறை நாட்களில் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும் செயல்படும். மேலும் இம்மருந்தகங்களுக்கு ரூ.22 இலட்சம் மதிப்பில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், இலுப்பூரில் கால்நடை உதவி இயக்குநர் அலுவலகம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருவதுடன், விராலிமலை சட்டமன்ற தொகுதி முழுவதிலும் பல்வேறு கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் இலுப்பூர் உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் 36 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இதே போன்று விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு தேவையான இடங்களில் கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் தமிழகஅரசின் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள பயனாளிகள் தற்பொழுது தேர்வு செய்யப்பட்டு வருவதுடன் விரைவில் பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.சதாசிவன், திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், உதவி இயக்குநர் மரு.தேவதாஸ், கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ராமசாமி, ஆத்மாக்குழுத் தலைவர்கள் திரு.சாம்பசிவம், திரு.பழனியாண்டி, முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.தமிழரசன், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**